# கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 94/2024**

திரு. வேலுசாமி (P.W. –1) **04.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை கிரயம் பெறுவதற்காக எந்த தேதியில் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்டது என்றால் 9.2.2016 ஆம் தேதி ஏற்பட்டது. தாவா சொத்தை நேரில் சென்று கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு அளந்து பார்த்தீர்களா என்றால் அளந்து பார்த்தேன். அளவுகள் சரியாக இருந்தது. கிரைய ஒப்பந்த ஆவணம் எத்தனை முறை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் மூன்று முறை செய்யப்பட்டுள்ளது. கிரைய தொகை என்ன என்றால் ஆறு லட்சம்.

2. கால நீட்டிப்பு செய்து கொண்ட பிறகு தாவா சொத்தை கிரையம் பெறுவதற்காக கிரைய ஒப்பந்தத்தின்படி தயாராக இருந்து கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொள்ள இருந்தேன் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. பலமுறை அவருடைய வீட்டிற்கு சென்றேன். தாவாவிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கிரையத்தொகை என்னுடைய கையிருப்பில் இருந்தது என்ற விவரங்களை சொல்லி உள்ளேன். தாவா சொத்து இன்றைய தேதியில் கிரைய ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிட்ட உள்ள தொகையை விட அதிக மதிப்பு பெறும் என்றால் சரி. பத்து வருடங்கள் ஆகிவிட்டது.

3. 2016 ஆம் வருடம் கிரைய ஒப்பந்ததில் குறிப்பிட்ட மதிப்பு தான் தாவா சொத்து போறும். இன்றைய தேதியில் தாவா சொத்து என்ன விலை போகுமோ அந்த விலைக்கு தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு ஒப்பந்தம் போடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு இன்றைய தேதியில் உள்ள மதிப்பிற்கு கிரைய தொகை கணக்கீடு செய்து செலுத்தினால் தாவா சொத்தை கிரயம் செய்து தர

பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள் என்றால் தவறு. கால நீட்டிப்பின் அடிப்படையில் கிரைய ஒப்பந்த ஆவணத்தின் மதிப்பிற்கு கிரையம் செய்து கொள்ள தயாராக உள்ளேன்.

4. இன்றைய தேதியில் தாவா சொத்தின் மதிப்பிற்கு தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு தயாராக இல்லை என்றால் முன் தொகையை திருப்பி செலுத்த பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு சொத்து தான் வேண்டும். கால நீட்டிப்பு செய்யப்பட்ட மூன்று இடத்திலும் என்னுடைய கையொப்பம் இல்லை. பிரதிவாதிகள் கையொப்பம் மட்டும்தான் உள்ளது. அதனால் கால நீட்டிப்பே சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தொகையைப் பெற்றுக் கொண்டு அவர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள். முதல் விசாரணை சங்கதிகள் பொய் தாவா கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாவா சொத்தை கிரயம் பெற நான் தயாராக இல்லை என்பதால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர்.கண்ணன்.
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.